بسم الله الر حمن الرحيم

# சுவனப் பாதை

ஈருலக வெற்றியின் வழிகாட்டி

வெளியீடு: இஸ்லாமிய அழைப்பகம், ஸனாய்யியா, ஜித்தா, சவூதி அரேபியா. இதழ்: 3:7, ரபியுல் ஆகிர், 1428, பக்கங்கள்-12
P.O.Box-32628, Jeddah-21438, K.S.A, E-Mail : suvanam@gmail.com, ibrahim@dawahoffice.org.sa

## இஸ்லாத்தில் முடி அலங்காரம்

*- மௌலவி. இப்ராஹீம் மதனி. M.A*

மனிதனின் உடலில் இருக்கும் முடிகளைப் பற்றி இஸ்லாம் கூறும் ஒழுங்குகளை இத்தொடரில் நாம் தெரிந்து கொள்வோம்.

மனிதனின் உடலில் தலையிருந்து கால் வரை முடிகள் இருக்கின்றன. முதலில் தலைமுடி பற்றி இஸ்லாம் என்ன கூறுகின்றது? என்பதைத் தெரிந்து கொள்வோம். இவ் விஷயத்தில் இஸ்லாம் மனிதனின் விருப்பப்படி அதை விட்டுவிடுகின்றது. பிற மதக்கலாச்சாரங்களுக்கு ஒப்பாகாதபடி, விரும்பியவர்கள் தலை முடியை வளர்க்கலாம் அல்லது குறைக்கலாம் அல்லது மழிக்கலாம். இது ஒவ்வொருவரின் விருப்பத்திற்கு உட்பட்டதாகும். தலைமுடியை மழிப்பது வளர்ப்பதை விட சிறந்தது என்று கூறுவதற்கு எந்த ஆதாரமும் இல்லை. மாறாக நபி(ஸல்) அவர்கள் ஹஜ், உம்ரா இல்லாத நிலைகளில் தலைமுடியை வளர்த்திருப்பதாகவே அதிக ஹதீஸ்கள் கூறுகின்றன.

நபி(ஸல்) அவர்களின் முடிகள் இரு காதுச் சோனை வரை இருந்ததாகவும் மற்றும் ஒரு அறிவிப்பில் அவர்களின் இரு தோள்புஜங்கள் வரை இருந்ததாகவும் இரண்டு அறிவிப்புகள் முஸ்லிம் கிரந்தத்தில் பதியப்பட்டிருக்கின்றன.

அபூதாவூதிலுள்ள வேறு ஒரு அறிவிப்பில்- நபி(ஸல்) அவர்களுக்கு அடர்த்தியான முடிகள் இருந்ததாகவும், நபி(ஸல்) அவர்கள் தலைமுடியை இரண்டாக பிளந்து வார்ப்பதாகவும் அன்னை ஆயிஷா(ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

இவ்வாறு நபி(ஸல்) அவர்கள் தலைமுடியை வளர்த்திருந்தார்கள் என்னும் ஹதீஸ்களே அதிகம். நபி(ஸல்) அவர்கள் உம்ரா மற்றும் ஹஜ் செய்யாத நேரத்தில் தலைமுடியை மழித்ததாக எந்த ஹதீஸும் இல்லை என்றே கருதுகின்றேன். ஆகவே ஒவ்வொருவரும் அவரவர் விரும்பும் விதத்தில் இஸ்லாம் அனுமதிக்கும் அளவு முடி வளர்ப்பதில் குற்றமில்லலை.

இதுமட்டுமின்றி உடம்பிலுள்ள மீசை, தாடி, அக்குள் முடி மறைவிடத்திலுள்ள முடிகள் நகம் வளர்ப்பது பற்றி இஸ்லாம் கூறும் சட்டங்கள் பற்றியும் இத்தொடரில் அறிந்து கொள்வோம்.

### உள்ளே

**இணையம் ஒரு கழுகுப் பார்வை - 3**
**எது வெற்றி? - 5**
**சுற்றுச் சூழல் - 6**
**இணையச் செய்தி (மைக்ரோ ஓவன்) - 7**
**கூகிள் (தேடுபொறி) - 8**
**DSL - இணைப்பு பெறுவது எப்படி? - 9**
**பனிப்பிரதேச பட்டாம் பூச்சி - 11**
**அறிவுப்போட்டி - 12**

### தலை மற்றும் தாடியிலுள்ள நரை முடிகளை பிடுங்குவது

தலை மற்றும் தாடியில் இருக்கும் நரை முடிகளை பிடுங்குவது தடுக்கப்பட்டிருக்கின்றது.

அம்ரு பின் ஷுஐப் (ரலி) அவர்கள் தம் தந்தை ஷுஐப்(ரலி) அவர்கள் வாயிலாகவும் அவர் தம் பாட்டனார், அம்ரு பின் ஆஸ்(ரலி) வாயிலாகவும் அறிவிக்கிறார்கள்:

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். நரைமுடியைப் பிடுங்காதீர்கள். நிச்சயமாக அது கியாமத் நாளில் முஸ்லிமின் ஒளியாகும்.

*ஆதாரம் : அபூதாவூது, திர்மிதி, நஸயீ*

*அறிவிப்பாளர் : அம்ரு பின் ஷுஐப்(ரலி)*

தலைமுடியில் சிலதை மழித்து சிலதை விட்டுவிடுவது இன்று மேற்கத்தியவாதிகளின் பழக்கமாக இருக்கின்றது. இதை நவீன நாகரீகம் என்று தலையின் ஒரு சில பகுதிகளை மழித்துவிட்டு ஒரு சில பகுதிகளை விட்டுவிடக்கூடிய முஸ்லிம்களும் இருக்கின்றார்கள். குறிப்பாக மேற்கத்தியவாதிகளின்மீது மோகம் பிடித்த வாலிபர்கள்தான் இதை அதிகம் செய்கின்றார்கள். இது முற்றிலும் இஸ்லாத்தில் தடுக்கப்பட்டவையாகும்.

இதே போல் சில ஹாஜிகள், உம்ரா செய்துவிட்டு தலையின் பாதியை மழித்துவிட்டு மறுபாதியை ஹஜ்ஜில் மழிப்பதற்காக அப்படியே விட்டுவிடுகின்றார்கள். (துல் ஹஜ் பிறை எட்டாம் நாளுக்கு சற்று முன் வருபவர்கள்தான் இப்படிச் செய்வார்கள்) இதுவும் தவறான முறையாகும்.

உம்ராவிலோ ஹஜ்ஜிலோ முடிகளை எடுப்பதற்கு இரண்டு முறைகள்தான் இருக்கின்றன. ஒன்று எல்லா முடிகளையும் மழித்துவிட வேண்டும். அல்லது கத்தரித்துவிட வேண்டும். பாதியை உம்ராவிலும் மறு பாதியை ஹஜ்ஜிலும் மழிப்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: தலை முடியில் சிலதைச் சிரைத்தும், சிலதை விடுவதையும் விலக்கியுள்ளார்கள்.

*ஆதாரம் : புகாரி, முஸ்லிம்*

தலையில் ஒரு பகுதி மழித்தும், ஒரு பகுதி விடப்பட்டுமுள்ள ஒரு சிறுவனைப் பார்த்த நபி(ஸல்) அவர்கள் இதை விட்டும் (மக்களைத்) தடுத்தார்கள். மீண்டும் கூறினார்கள்: தலைமுடி முழுவதையும் சிரைத்து விடுங்கள் அல்லது அவற்றை முழுமையாக தலையில் விட்டுவிடுங்கள்.

*ஆதாரம் : அபூதாவூத்*

### தலைமுடியை முழுமையாக பெண்கள் மழிப்பது

பெண்கள் ஆண்களைப் போன்று தலைமுடிகளை குறைத்து கத்தரிக்கக் கூடாது. அப்படிச் செய்வதை நபி(ஸல்) அவர்கள் தடுத்துள்ளார்கள். இது ஆண்களுக்கு ஒப்பான செயலுமாகும். இதுவும் இஸ்லாத்தில் தடுக்கப்பட்டவையாகும்.

இன்றைய முஸ்லிம் பெண்களில் சிலர் எந்தவித வித்தியாசமுமின்றி ஆண்களைப் போல் தனது முடிகளை கத்தரித்துக் கொள்கின்றார்கள். இது முற்றிலும் தடுக்கப்பட வேண்டியவையாகும். சிரமம் ஏற்படும் அளவுக்கு முடி அதிகம் உள்ள பெண்கள் ஆண்களுக்கு ஒப்பாகாதபடி குறைத்துக் கொள்வதில் குற்றமில்லை.

பெண்கள் தலைமுடியை சிரைத்துக் கொள்வதை நபி(ஸல்) அவர்கள் விலக்கியுள்ளார்கள்.

***ஆதாரம் : நஸாயி***

பெண்களைப் போன்று வேஷம்போடும் ஆண்களையும், ஆண்களைப் போன்று வேஷம்போடும் பெண்களையும் நபி(ஸல்) அவர்கள் சபித்துள்ளார்கள்.

***ஆதாரம்: புகாரி***

### பொய்முடி (ஒட்டுமுடி)

ஒரு ஆணோ அல்லது பெண்ணோ பிற முடிகளை தன் தலையில் சேர்க்கக்கூடாது. சேர்க்கப்படும் முடி மனிதனின் முடியாக இருந்தாலும் சரி அல்லது செயற்கை முடியாக இருந்தாலும் சரி, அனைத்தும் தடுக்கப்பட்டவையாகும். காரணம் முடி கொட்டிப்போன ஒரு ஆணோ அல்லது பெண்ணோ தன் தலைமுடியில் பொய் முடிகளை கட்டிக் கொண்டால் பிறர் அதைக் கண்டு ஏமாற்றமடையலாம்.

உதாரணத்திற்கு, திருமணமாக இருக்கும் ஒரு பெண் பொய் முடி கட்டிய பெண்ணாக இருந்து அது அவளின் உண்மை என்று நினைத்து அவளை ஒரு ஆண் திருமணம் செய்துகொண்டால், உண்மை தெரிந்த பின் அவன் ஏமாற்றமடைவான். இவ்வாறே பொய்முடி கட்டிய ஆணை கணவனாகப் பெறும் பெண்ணின் நிலையும். இது போன்ற காரணங்களுக்காக பொய்முடி கட்டுவதை இஸ்லாம் தடுத்திருக்கின்றது.

ஒரு பெண் நபி(ஸல்) அவர்களிடம் வந்து அல்லாஹ்வின் தூதரே! என் மகளுக்கு தலையில் கடி ஏற்பட்டதால் அவளின் தலைமுடி கொட்டி விட்டது. அவளை நான் திருமணம் செய்து கொடுத்துள்ளேன். ஆகவே அவளின் தலைமுடியுடன் வேறொரு பெண்ணின் தலை முடியைச் சேர்த்து விடட்டுமா? என்று கேட்டார்கள். அதற்கு நபி(ஸல்) அவர்கள் பொய் முடி கட்டும் பெண்ணையும் கட்டிவிடப்படும் பெண்ணையும் அல்லாஹ் சபிப்பானாக என்றார்கள்.

***ஆதாரம் : புகாரி, முஸ்லிம்***

இன்னும் ஒரு அறிவிப்பில்

பொய்முடி கட்டிவிடும் பெண்ணுக்கும், பொய்முடியை கட்டிவிடும்படி கேட்கும் பெண்ணுக்கும் அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

***ஆதாரம் : புகாரி. முஸ்லிம்***

மற்றொரு அறிவிப்பில், ஒரு பெண்ணின் தலைமுடியை, தம் முடியுடனோ, பிறர் முடியுடனோ சேர்க்கும் பெண்ணையும், தனக்கு அவ்வாறு சேர்த்து வைக்கும்படி கேட்கும் பெண்ணையும், (அல்லாஹ் சபித்து விட்டான்) என நபி(ஸல்) அவர்கள் கூறியதாக வந்துள்ளது.

அன்னை ஆயிஷா(ரலி) அவர்களின் இது போன்றதோர் அறிவிப்பும் புகாரி, முஸ்லிம் கிரந்தங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

முஆவியா(ரலி) அவர்கள் ஹஜ்ஜுச் செய்த ஆண்டில் (திருமதீனாவில்) மிம்பரில் சொற்பொழிவாற்றினார்கள். அதனை நான் செவிமடுத்தேன். அப்பொழுது அவர்கள் ஒரு காவலரின் கரத்தில் இருந்த ஒரு பிடி தலைமுடியை எடுத்து, மதீனாவாசிகளே! உங்களின் உலமாக்கள் எங்கே? இது போன்ற செயலை "(அழகை அதிகப்படுத்தப் பிறரின் தலைமுடியைத் தன் தலை முடியுடன் சேர்த்து வைத்துக் கொள்வதை) விலக்குபவர்களாக நபி(ஸல்) அவர்கள் இருந்தார்கள். அதனை நான் அவர்களிடமிருந்து செவிமடுத்துள்ளேன். அவர்கள் கூறுகிறார்கள்.(உங்களுக்கு முன்னர்)பனூ இஸ்ராயீல்கள் அழிந்ததெல்லாம், அவர்களின் பெண்கள் இதனை (பிறரின் தலைமுடியைச் சேர்த்து வைப்பதை) மேற்கொண்ட பொழுதுதான்.

***ஆதாரம் : புகாரி, முஸ்லிம்:***

***அறிவிப்பாளர் : ஹுமைது பின் அப்திர் ரஹ்மான்(ரலி)***

பிறர் தலைமுடியை தன் தலைமுடியுடனோ, அல்லது மற்ற பெண்ணின் தலைமுடியுடனோ, சேர்த்து வைக்கும் பெண், அவ்வாறு தனக்கு பிற பெண்ணின் தலைமுடியைச் சேர்த்து வைக்கும்படி கேட்கும் பெண், உடலில்(பச்சைக் குத்துதல், சூடு போடுதல் போன்ற) அடையாளங்கள் இடும் பெண், அவ்வாறு தன் உடலில் அடையாளம் போடுமாறு கேட்கும் பெண் ஆகியோரை நிச்சயமாக நபி(ஸல்) அவர்கள் சபித்துள்ளார்கள்.

***அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் பின் உமர்(ரலி)***

***ஆதாரம் : புகாரி, முஸ்லிம்***

***(முடிகளுக்கு நிறம் பூசுவது. புருவ முடிகள், மீசை மற்றும் தாடி போன்றவற்றின் விளக்கம்..***

***இன்ஷாஅல்லாஹ் .. எதிர்வரும் இதழில்)***

---

# பிறர் குற்றங்களை ஆராயாதீர்!

(எவருடைய குற்றத்தையும்) நீங்கள் துருவித் துருவி விசாரித்துக் கொண்டிருக்க வேண்டாம்."

***அல்குர்ஆன் 49:12***

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் : "நாவால் ஈமான் கொண்டு இதயத்தில் ஈமான் நுழையாதவர்களே! இறைவிசுவாசிகளை நோவினை செய்யாதீர்கள், அவர்களது குறைகளைத் துருவித் துருவி ஆராயாதீர்கள். எவன் தனது சகோதர முஸ்லிமின் குறைகளை துருவித் துருவி ஆராய்கிறானோ அவனது கௌரவத்தை அல்லாஹ் அழித்துவிடுவான். எவன் தனது சகோதரனின் குற்றம் குறைகளை ஆராய்கிறானோ அவன் தனது வீட்டிற்கு மத்தியில் இருந்தபோதும் அல்லாஹ் அவனை கேவலப்படுத்தி விடுவான்." ***ஆதாரம் : தப்ரானி***

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: "எனது உம்மத்தினர் அனைவரும் மன்னிக்கப்படுவார்கள். அந்தரங்கத்தை பகிரங்கப் படுத்துபவனைத் தவிர. ஒரு மனிதன் இரவில் ஒரு செயலைச் செய்கின்றான். அல்லாஹ் அவனது செயலை மறைத்துவிட்ட நிலையில் காலையில் அவன் "ஓ! நேற்றிரவு நான் இன்னின்ன காரியத்தைச் செய்தேன்" என்று கூறுகிறான். அல்லாஹ் அவனது குறையை நேற்றிரவு மறைத்திருந்தான், அல்லாஹ் மறைத்ததை இவன் காலையில் பகிரங்கப்படுத்துகிறான்.

***ஆதாரம் : புகாரி***

# இணையம் – ஒரு கழுகுப் பார்வை

- S. ஹஸரத் அலி

சுவனப்பாதை நடத்திய மாபெரும் எழுத்துலகப் புரட்சிப் போட்டியில் மூன்றாம் ஆறுதல் பரிசு பெற்ற கட்டுரை) – (தொடர் – 3)

## SPELLING MISTAKE எழுத்துப் பிழை - ஏமாந்நிப் பிழை

தினந்தோறும் லட்சக்கணக்கான பக்கங்கள் அடிக்கடி பார்வையிடும் website முகவரியில் ஒரு எழுத்து கூட்டினாலோ அல்லது குறைத்தோ Domain முகவரி வாங்கிக் கொள்வார்கள். உதாரணமாக GOOGLE என்ற சைட்டிற்கு வருபவர்கள் கோடிக்கணக்கானோர். நீங்கள் அவசரத்தில் தவறாக ஒரு எழுத்தை கூட்டி அடித்தால் அவ்வளவுதான். ஆசிய அழகிகளின் அந்தப்புரத்திற்கு போய்விடுவீர்கள். அப்புறம், அம்பேல்தான்.

**ADVERTISING** : விளம்பரம் ஒரு தந்திரம் : நாம் ஈமெயிலையோ, வெப் பக்கங்களை பார்வையிடும் போது ஏராளமான விளம்பரம் POP-Upகள் வரும் குறிப்பாக Message Allert ` Error Message Alert Box You are a winnner, Collect your gift என்ற ஆசை விண்டோ தலைகாட்டும். நீங்கள் தவறிப் போய் OK கிளிக் செய்தால் நேராக நிர்வாண நீச்சல் குளத்தில் மூழ்க வேண்டியதுதான்.

## ENTRAPMENT – பொறி வைத்துப் பிடித்தல்

நீங்கள் தெரிந்தோ தெரியாமலோ ஒரு ஆபாச சைட்டிற்கு போய் விட்டீர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். உங்கள் கம்ப்யூட்டர் IP-Address-ஐ அவர்கள் குறித்துக் கொள்வார்கள். பிறகு தொடர்ந்து மாறனின் மன்மத மலர்கணைகள் வந்து விழுந்துகொண்டே இருக்கும். ஒரு அம்பில் தப்பினாலும் மற்றொன்று?

## LOOPING : ஆபாச தொடர் இணைப்பு

நம்ம ஊர் ஜவுளிக்கடை டெக்னிக்தான். ஏதோ துணி எடுக்க கடையில் நுழைவீர்கள், அங்குள்ள டிஸைன்கள் பிடிக்காவிட்டாலும் நீங்கள் எழுந்துவிட முடியாதவாறு இதைப் பாருங்க, அதைப் பாருங்க புது டிஸைன் என்று சொல்லி ஏதாவது ஒன்றை தலையில் கட்டிவிடுவார்கள். Loop வேலையும் இப்படித்தான் தப்பித்தவறி இங்கு கால்வைத்தால் அவ்வளவுதான் நீங்கள் Close button-ஐ கிளிக்செய்ய கிளிக் செய்ய புதுப்புது ஆபாச விண்டோக்கள் திறந்து கொண்டே இருக்கும். நமக்கு கைகால் உதறல் எடுத்துவிடும்.

## Mouse – Trap

எலிப் பொறியில் மாட்டிய எலி வெளியே தப்ப முடியாது. இந்த வெப்சைட் பொறியில் நுழைந்து விட்டால் வெளியேறும் வாசல்கள் பூட்டப்படும். Back button, close Button இரண்டையும் முடக்கிவிடுவார்கள். கையில் உள்ள மௌஸ் Useless ஆகிவிடும். பிறகு கண்காட்சிதான்?

## SPYware – Cookies

கொக்கி போடும் மக்கீக்கள். நம் ஹார்ட் டிஸ்கில் ஒளிந்து கொண்டு நம் நடவடிக்கைகளை அவர்களுக்கு நேரடியாக ஒளிபரப்பு செய்யும். Spyware எனக்கூறப்படும் ஒற்றர் மென்பொருள் நிரலிகள் நமது கம்ப்யூட்டர் ஹார்ட் டிஸ்கில் அமர்ந்து கொண்டு நமது ஒவ்வொரு கீபோர்ட் பட்டன்கள் அசைவையும் அப்படியே அனுப்பிவைக்கும். இதன் மூலம் நமது ரகசிய தகவல்கள், பாஸ்வோர்ட், வியாபார தகவல்கள், கிரெடிட் கார்டு ரகசிய எண்கள் எல்லாவற்றையும் தன்னுடைய எஜமானனுக்கு கடத்திவிடும். குறிப்பாக ஆபாச இணைய தளத்தை நடத்துபவர்களுக்கு நம்மைப் பற்றிய தகவல்களும் கிடைத்துவிடும்.

## ஈ-மெயில்

இதைப் பற்றி அதிகம் சொல்ல வேண்டியதில்லை. காட்டாற்று வெள்ளம் போல ஈமெயில்கள் பாய்கின்றன. Hotmail, Aol ஈமெயில்கள் மூலம் செக்ஸ் தள வியாபாரிகள் பெரிதும் பயன்பெருகின்றார்கள். தற்பொழுது வரும் ஈமெயில்கள் நவீன யுக்தியில் வடிவமைக்கப்பட்டு கண்ணைக் கவரும் மல்டி மீடியா வீடீயோவாக அனுப்பப்படுகிறது. நீங்கள் அறிந்தும் அறியாமலும் கிளிக் செய்துவிட்டால் போதும், உடனடியாக ஆபாச படம் திரையில் ஓட ஆரம்பிக்கும். Attachment File எல்லாம் இந்த ஆபாச ஈமெயிலுக்கு தேவைப்படாது. மேலும் நமது கம்ப்யூட்டரை முடக்கும் வைரஸ்கள் பயணம் செய்வது ஈமெயில் வழியே என்பது அனைவருக்கும் தெரியும். இதில் Home page என்ற வைரஸை மெயில் அனுப்பி நமது கம்ப்யூட்டரில் அமர்த்தி விடுவார்கள் . அது நமது User default home home page ஆக மாற்றி விடும். பிறகு நாம் நமது browser கிளிக் செய்தாலே நம்மை ஆபாச தளங்களுக்கே கொண்டுசெல்லும். காலையில் எழுந்தவுடன் நரி மூஞ்சியில் விழித்த கதையாக நம்நிலை மாறிவிடும்.

## E-Mail Spooling

இன்று வரும் ஈமெயில்களில் கையாளப்படும் நவீன டெக்னிக் அதாவது நமது ஈமெயில் address bookல் உள்ள முகவரிகளை மோப்பம் பிடித்து அந்த முகவரி பெயரிலேயே தங்களது ஆபாச சரக்கை அனுப்பி விடுவார்கள். நமக்கு எந்த சந்தேகமும் வராதபடி வலையமைத்து நம்மை கவனித்துவிடுவார்கள். நமக்கு முன்பே அறிமுகமானவர்களிடமிருந்துதான் மெயில் வந்துள்ளது என்று எண்ணி கிளிக்கினால் கிளுகிளுப்புதான்?!.

## Chat

நமது வீட்டிலுள்ள 12 வயது மகளுடன் தெருவில் போகின்ற எவனோ ஒருவன் நாம் வீட்டில் இல்லாத பொழுது வந்து உரையாடுவதற்கு வசதியாக வாசல் கதவை திறந்து வைத்துவிட்டுச் செல்வோமா? நிச்சயம் மாட்டோம். ஆனால் உண்மையில் அதுதான் நடக்கின்றது இணைய சாட்டிங்கில். முழுக்க முழுக்க ஆபாசமும், பொய்யும் புகுந்து விளையாடுவது Chat-ல்தான்.

உனக்கு வெட்கம் இல்லையென்றால் நீ விரும்பியதைச் செய்துகொள் என்று நபி(ஸல்) அவர்கள் சொன்னபடி வெட்கத்தை உதறித்தள்ளி முழு நிர்வாண சுதந்திர உரையாடலை இங்கு காணலாம்.

இன்றைய Chat Room களில் தற்பொழுது புதிய தொழிற் நுட்பங்கள் புகுந்து விட்டது. Bots எனப்படும் ரோபோட் புரோகிராம் அமைத்துள்ளார்கள். இருவர் உரையாடும் பொழுது இது இடையில் நுழைந்து கொள்ளும். உரையாடும் ஆணிடம் நீ என்னை நிர்வாணமாகப் பார்க்க வேண்டுமா இந்த பட்டனைக் கிளிக்செய் என்று கட்டளையிடும். இன்னும் பலவாறு Hot Girl, Click here to see me live என்று ஆசைகாட்டி மோசம் செய்யும். முழுக்க முழுக்க ஷைத்தான்

மாய விளையாட்டுகள் இங்கு முழு வீச்சில் நடந்து கொண்டு வருகின்றது.

**Password Surffing**

நமது ரகசிய பாஸ்வேர்டுகளை மோப்பம் பிடித்து நமது கம்ப்யூட்டரில் உள்ள அனைத்து சங்கதிகளையும் உருவிவிடுவார்கள். நமது கம்ப்யூட்டரில் உள்ள Credit Card எண் போன்றவற்றை திருடி நமது கணக்கில் இவர்கள் பொருள்கள் வாங்கிவிடுவார்கள். திருநெல்வேலிக்கே அல்வா கொடுத்த கதை இப்படித்தான். மைக்ரோ சாப்ட் நிறுவனர் பில்கேட்ஸின் கிரிடிட் கார்டு எண்ணைத் திருடி அவருக்கே "வயாகரா" பண்டலை பார்சல் செய்தனர்.

**File Sharing**

ஆபாசத் தளங்கள் படு மோசமாக பரவுவதற்கு காரணமாக இருப்பது ஃபைல் பரிமாற்ற சேவையில்தான். ஏனென்றால் இது முற்றிலும் இலவசம் பெரும்பாலோருக்கு இது பற்றி இன்னும் விளங்கவில்லை. இந்த தகவல் பரிமாற்றத்தில் நடைபெறுகின்றது. இது யாருக்கும் தெரியாமல் நடக்கிறது. இந்த Net Workகள் www என்ற இணையத்திற்குள் வராமல் நேரிடியாக நடைபெறுகிறது. நமது Browser-களான Internet Exploreer, netscafe இவைகளை தாண்டியே வந்து குதிக்கும் அளவிற்கு ஏற்பாடு உள்ளது.

**Bulletin Boards**

தகவல் பலகை File sharing போன்ற தகவல் பலகையும் இணையதிற்குள் நுழையாமலே நம் கம்ப்யூட்டரை வந்தடையும் நாம் ஒருவருக்கு தொலைபேசியில் dial செய்து அவருடன் நேரடியாக தொடர்பு கொள்வது போன்று நமது கம்ப்யூட்டரில் உள்ள Modem மூலம் அவர்களது கம்ப்யூட்டருக்கு டயல் செய்து அங்கிருந்து நேரடியாக மொத்த கொள்முதல் செய்து கொள்வது, இந்த கொள்முதல் இண்டெர்நெட் சந்தைக்கு தெரியாது. ஏராளமான ஆபாச தொழில்கள் இங்குதான் நடக்கும். இவர்கள் தளங்களுக்கு எவரையும் இவர்கள் அனுமதிப்பதில்லை. பாஸ்வேர்ட் கொடுத்து வேண்டியவர்களை மட்டுமே நுழைய விடுவார்கள்.

இது வரை இண்டெர்நெட் எனும் இணையத்தை ஷைத்தான் எப்படி தவறாக பயன்படுத்தி வருகிறான் என்பதைப் பார்த்தோம். இதிலிருந்து நாமும் நமது மனைவி, மக்களும் எப்படி தப்புவது என்பதை தெரிந்து கொள்வோம்.

1) வீட்டிலுள்ள கம்ப்யூட்டர் மானிடரை அனைவரும் பார்க்கும் வகையில் திருப்பி வைக்க வேண்டும். நல்ல செய்திகளுக்கு ரகசியம் தேவையில்லை.

2) நல்ல web தளங்களின் icon களை desktop-ல் வைக்க வேண்டும்.

3) கம்ப்யூட்டரில் ISP இணைப்பு எப்பொழுதும் இருக்கக் கூடாது. நாம் விரும்பும் நேரத்தில் மட்டும் இணைப்பு கொடுக்கவேண்டும்.

4) முன்பின் அறிமுகமில்லா எவரிடமும் Chat செய்ய அனுமதிக்கக் கூடாது. இதைப்பற்றிய அறிவுரை, ஆலோசனைகளை நம் மக்களுடன் கலந்து பேசி இவர்களிடம் விழிப்புணர்வு ஊட்ட வேண்டும்.

5) நல்ல Internet Filter software filters-களை நாம் Install செய்ய வேண்டும்.

6) முக்கியமாக பெற்றோர்கள் குழந்தைகளிடம் கலந்து பேசி நட்புணர்வோடு இருக்க வேண்டும். கவனிப்பும், பரிவும் அவசியம். இவை பெற்றோரிடம் கிட்டாவிடில் முகமறியா எவனோ ஒரு புதியவன் Chat Room-ல் கொடுத்து பின்பு கெடுத்தும் விடலாம்.

7) சிறந்த Internet filterfis install செய்ய வேண்டும்.

8) எல்லலாவற்றிற்கும் மேலாக மார்க்கம், தீன் வீட்டில் உலாவரும் நிலையை ஏற்படுத்த வேண்டும்.

எல்லாம் வல்ல அல்லாஹ் நம் அனைவரையும் இணையத்தின் நன்மைகளைத் தேடியடைந்து ஈருலக நன்மைகளை அடைய வைப்பானாக! இணையத்தின் தீமைகளிலிருந்து நம்மைத் தடுத்து நரக நெருப்பிலிருந்து பாதுகாப்பானாக!

Ref : 1) www.islam.com 2) www. nytimes.com 3) www.troubedwith.com 4) http: internet-filter-review.com 5) www.islamonline.com 6) http://news.bbc.co.uk.

## – பணியாளைவிடச் சிறந்தது –

நபி(ஸல்) அவர்களின் மருமகன், அலி(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

திரிகைச் சுற்றி (தானியங்களை அரைப்பதனால்) தாம் அடையும் வேதனை குறித்து (நபி(ஸல்) அவர்கள் அன்பு மகளும், என் மனைவியுமான) ஃபாத்திமா(ரலி) அவர்கள் முறையிட்டார்கள்.

இந்நிலையில் போர்க்கைதிகள் சிலர் கொண்டு வரப்பட்டனர்.

உடனே ஃபாத்திமா(ரலி) அவர்கள் (நபி(ஸல்) அவர்களிடம் வீட்டு வேலைக்காக கைதி எவரையாவது கேட்டு வாங்கி வரச்) சென்றார்கள். ஆனால் நபி(ஸல்) அவர்களைக் காணவில்லை. (அவர்கள் அன்பு மனைவி) ஆயிஷா(ரலி) அவர்களைத்தான் கண்டார்கள். ஆகவே தாம் வந்த நோக்கத்தை ஆயிஷா(ரலி) அவர்களிடம் ஃபாத்திமா(ரலி) அவர்கள் தெரிவித்தார்கள்.

நபி(ஸல்) அவர்கள் (வீட்டிற்கு) வந்த போது ஆயிஷா(ரலி)அவர்கள் ஃபாத்திமா(ரலி) அவர்கள் வந்ததைத்(பற்றிய விபரங்களை) தெரிவித்தார்கள். உடனே நபி(ஸல்) அவர்கள் எங்களிடம் வந்தார்கள். அதற்குள் நாங்கள் எங்கள் படுக்கைக்குச் சென்றிருந்தோம். (நபி(ஸல்) அவர்களை கண்டவுடன் நான் எழுந்து நிற்க முனைந்தேன். அப்போது நபி(ஸல்) அவர்கள் நீங்கள் (இருவரும்)உங்கள் இடத்திலேயே இருங்கள் என்று சொல்லிவிட்டு எங்களுக்கிடையே (வந்து) அமர்ந்தார்கள். எந்தளவெனில் அவர்கள் கால்களின் குளிர்ச்சியை நான் என் நெஞ்சின் மீது உணர்ந்தேன்.

பிறகு நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் , 'நீங்கள் இருவரும் என்னிடம் கோரிய(உதவி)தனை விடச் சிறந்த ஒன்றை உங்கள் இருவருக்கும் நான் கற்றுத் தரட்டுமா? (என்று கேட்டு), நீங்கள் இருவரும் உங்கள் படுக்கைக்கு செல்கையில் 33 முறை ஸுப்ஹானல்லாஹ் (அல்லாஹ் தூயவன்) என்று சொல்லுங்கள், 33 முறை அல்ஹம்துலில்லாஹ் (புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே) என்று சொல்லுங்கள். 34 முறை அல்லாஹு அக்பர் (அல்லாஹ் மிகப் பெரியவன்) என்று சொல்லுங்கள். அது ஒரு பணியாளை விட உங்கள் இருவருக்கும் சிறந்ததாகும்' என்று கூறினார்கள்.

***ஆதாரம் : புகாரி***

# எது வெற்றி ?

**- *அபூ சல்மா.B.E, M.B.A***

வெற்றி பெறுவது என்பது வேறு. பிறரைத் தோற்கடிப்பது என்பது வேறு. இதற்கிடையில் உள்ள வித்தியாசத்தைப் பலர் உணர்வதில்லை. பிறரைத் தோற்கடிப்பது சுலபம். ஆனால் நாம் வெற்றி பெறுவது என்பது கடினமான காரியம். இந்த இரண்டையும் ஒன்றாகக் குழப்பிக் கொண்டவர்கள் பலர்.

இன்றைக்கு நம்முடைய அரசியல்வாதிகள் பலர், பிறரைத் தோற்கடித்த விஷயத்தை பிறரது தோல்வியை தங்கள் வெற்றி விழாவாகக் கொண்டாடுவதுதான் வேடிக்கையாக இருக்கிறது.

நாம் அறிவாளியாவது என்பது வேறு. பிறரை முட்டாளாக்குவது என்பது வேறு. இரண்டும் ஒன்றாகிவிட முடியுமா? எத்தனை பேரை வேண்டுமானாலும் சுலபமாக நீங்கள் முட்டாளாக்கிவிட முடியும். ஆனால் நீங்கள் அறிவாளி ஆவது சுலபமான காரியம் இல்லை. முயற்சி, திறமை, இப்படி எவ்வளவோ அதற்குத் தேவை! உதாரணம் சொல்லுகிறேன்.

பள்ளிக் கூடத்தில் படிக்கும் பத்து வயதுப் பெண், தன் முப்பத்து ஒன்று வயது அப்பாவிடம் வந்து நின்றாள். விழிகளை அகல விரித்தபடி அப்பாவிடம் ஒரு புதிர் போட்டாள். “அப்பா... ஒரு குட்டிக் குரங்கு... தனியா மரத்துல உட்கார்ந்து இருக்கு... அந்த மரத்துக்குக் கீழே திடீர்னு வெள்ளம் வந்துடுச்சு... காட்டாத்து வெள்ளம்... திரும்பின பக்கம் எல்லாம் ஓடுது... அந்தக் குட்டிக் குரங்குக்கு நீந்தத் தெரியாது... பயங்கர வெள்ளம் கீழே... அது எப்படித் தப்பிக்கும், சொல்லு?” என்று அப்பாவை அசர வைத்தாள் மகள்.

**...பிறரை வாய் மூடச் செய்வது... செயலிழக்கச் செய்வது... தோற்றுப் போகச் செய்வது... ஆளவிடாமல் தடுப்பது... முன்னேற முடியாதபடி முதுகை முறிப்பது... இப்படிப் பிறரைத் தோற்கடிப்பதைத் தம்முடைய வெற்றியாக...**

அரை மணி நேரம் மாறி மாறி யோசித்த அப்பா முடிவில் தன் தோல்வியை ஒப்புக் கொண்டார். “அந்தக் குட்டிக் குரங்கு எப்படித் தப்பிக்கும்... தெரியலை, நீயே சொல்லு” என்றார் மகளிடம். “... இவ்வளவு பெரிய குரங்கு உனக்கே தெரியலை... அந்தக் குட்டிக் குரங்குக்கு மட்டும் எப்படி தெரியும்?” என்று கையை அப்பா முகத்துக்கு நேரே ஆட்டிவிட்டுச் சிட்டாய்ப் பறந்தாள் அந்தச் சின்னப் பெண்.

அவளிடத்திலும் கேள்விக்கு விடையில்லை. ஆனால் அப்பாவைக் குரங்கு என்று கேலி செய்ய, முட்டாளாக்க அரை மணி நேரம் செலவிட்டாள் அந்தச் சின்னப் பெண். இன்றைக்கு இந்தச் சின்னத்தனம்தான் எங்கும் நடக்கிறது.

பிறரை வாய் மூடச் செய்வது... செயலிழக்கச் செய்வது... தோற்றுப் போகச் செய்வது... ஆளவிடாமல் தடுப்பது... முன்னேற முடியாதபடி முதுகை முறிப்பது... இப்படிப் பிறரைத் தோற்கடிப்பதைத் தம்முடைய வெற்றியாகக் கருதுகிறார்கள்.

இந்தத் தவறுதலான எண்ணத்தில் இருந்து தயவு செய்து வெளியே வாருங்கள். பிறரைத் தோற்கடிப்பது இலட்சியமல்ல... நமது வெற்றியே நமது குறிக்கோள்... என்கிற தெளிவு இருக்க வேண்டும். நாம் வெற்றி பெற்றால் நமக்கு எதிரிகள் இருக்கமாட்டார்கள். பிறரைத் தோற்கடித்தால் நாம் ஒரு நிரந்தர எதிரியை ஏற்படுத்திக் கொள்கிறோம். நாம் யாரைத் தோற்கடித்தாலும் அவர் நம்மைத் தோற்கடிக்கவே தமது எஞ்சிய காலம் முழுவதையும் செலவிடுகிறார்.

பிறரைத் தோற்கடிப்பது நமது நோக்கம் அல்ல என்பதை இன்னொரு கோணத்தில் பார்ப்போம். ஒரு குழந்தையுடன் கடைவீதிக்குப் போகிறாள் அம்மா. அங்கு ஏதோ ஒரு தின்பண்டம் வேண்டும் என்று குழந்தை அழுதது. வாங்கித் தராமல் அம்மா பிடிவாதமாக வந்துவிட்டாள். குழந்தை முகம் வாடிவிட்டது.

உடனே அம்மாவிற்கு மனம் கேட்கவில்லை. மீண்டும் கடைவீதிக்குப் போய் குழந்தை கேட்ட தின்பண்டத்தை வாங்கி வந்து குழந்தைக்குக் கொடுக்கிறாள். அப்போது சில குழந்தைகள் மகிழ்ச்சியாக வாங்கிக்கொள்ளும்.

சில குழந்தைகளோ வம்பு செய்யும். தூக்கி எறியும். அது கேட்டபோது கிடைக்காததால், கிடைக்கிறபோது வேண்டியதில்லை என்று புறக்கணிக்கும். அம்மா கெஞ்சுவாள். தனக்குத் தராமல் துன்புறுத்திய தாயைப் பழிவாங்கும் நோக்கில் தின்னாமல் துன்புறுத்தும் பிள்ளைகளும் உண்டு. நீங்கள் எந்த வகை யோசித்ததுண்டா?

கேட்டது கிடைப்பது வெற்றி. கொஞ்சம் முன் பின்னாகக் கிடைத்தாலும் வெற்றி வெற்றிதான். ஆனால் அந்த வெற்றியை அனுபவிக்க முடியாதபடி சிறுபிள்ளைத்தனமான அகங்காரத்தால் பிறரைத் தோற்கடிப்பவர் உண்டு.

வளர்ந்த பிறகும் இந்தக் குணம் பலரை விடுவதில்லை. கணவனிடம் புடவை கேட்பார்கள்... முதலில் மறுத்துவிட்டுப் பிறகு மனம் மாறிக் கணவன் வாங்கிக் கொடுத்தால் கட்டமாட்டேன் என்று சிலர் பிடிவாதமாக மறுத்துவிடுவார்கள். அவனை மனம் நோகச் செய்து தோற்கடிப்பதில் அலாதியான மகிழ்ச்சி அடைவார்கள்.

நாம் நோக்கத்தில் தெளிவாக இருந்தால் இந்தத் தவறு நடக்காது. நமது வெற்றிதான் முக்கியம். பிறரைத் தோற்கடிப்பதில் நமக்கு என்ன நன்மை விளையப் போகிறது?

அதனால்தான் பகை வளர்கிறது. தாங்கள் வெற்றி பெறுவதற்காகப் பயன்படுத்தினால் தேசம் வளர்ச்சியுறும். பிறரைத் தோற்கடிப்பது வெற்றி அல்ல! நாம் வெற்றி பெறுவதே வெற்றி என்கிற துல்லியமான வேறுபாட்டைப் புரிந்து கொண்டால் வெற்றி நிச்சயம்! (இன்ஷாஅல்லாஹ்)

குறிப்பு: இந்த தகவல்களில் குறிப்பிடப்பட்டுள்ள விஷயங்களில் ஒருசில அல்லது எல்லாமே உங்களிடம் இருக்குமேயானால் நிதானமாக மனதை ஒருமைபடுத்தி ஒன்றிற்கு மேற்பட்ட தடவைகள் படித்து பாருங்கள் உங்களின் தவறு விளங்கும், அதனை திருத்திக் கொண்டு உண்மையான வெற்றியை அடைந்து கொள்ள வழிகிடைக்கும். அதுவல்லாமல் ஆழ்ந்த மற்றும் பரந்த சிந்தனையில்லாமல் படிப்பீர்களேயானால் வெற்றி அடைய முயற்சிப்பதை விட்டுவிட்டு பழைய நிலையைவிட மோசமான சூழ்நிலைக்கு தள்ளப்படுவீர்கள் என்பதை நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டுகிறேன்.

# சுற்றுச் சூழல்

- *உம்மு சல்மா*

இருபத்தியோராம் நூற்றாண்டில் மிகப்பெரும் நெருக்கடியாக சுற்றுச்சூழல் நெருக்கடி விஸ்வரூபம் எடுத்துள்ளது.

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் குடிநீர்ப் பஞ்சம் பொய்த்துப் போகும் மழை வரலாறு காணாத சுட்டெரிக்கும் வெயில், புயல், வெள்ளம் என இந்த நெருக்கடியின் பரிமாணங்களைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

இதற்கான காரணங்கள் என்ன? மனித குலத்தின் இருப்பையே கேள்விக்குறியாக்கி விடும் அளவிற்கு உக்கிரமாகத் தலையெடுத்துள்ள இந்தப் பிரச்சினையின் ஆணி வேர் எது?

காடுகள் அழிப்பு, குளோரோ, புளோரோ கார்பன் வாயுக்களின் தங்கு தடையில்லாத பயன்பாடு சுற்றுச்சூழல் மாசுபடுத்தும் லெட் பெட்ரோல் என்று காரணங்களின் பட்டியலும் நீளும்.

ஆனால் அடிப்படைக் காரணம் ஒன்று உண்டு. அதுதான் "மனித வாழ்வு பற்றி கண்ணோட்டம்".

நவீன யுகத்தின் சிந்தனையாளர்களும் சுதந்திரச் சந்தை, தாராளமயமாக்கல், உலகமயமாக்கல் போன்ற உலகாதாயக் கொள்கை வகுத்தவர்கள் முன் எவருக்கும் சிந்தனை தான் இந்த நெருக்கடிக்கு முதன்மைக் காரணமாகும்.

இவர்கள் கூறுவதென்ன?

நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பேரண்டத்தைத் தன் வசப்படுத்துவதுதான் மனிதனின் குறிக்கோள். இதற்காக மனிதன் எவருக்கும் பதிலளிக்க வேண்டியதில்லை. இந்தச் சிந்தனையும் இது தந்த ஏக்கமும் தான் இன்றைய எல்லாக் குளறுபடிகளுக்கும் அடிப்படைக் காரணம். இந்தச் சிந்தனை ஏற்படுத்திய விளைவுகள் எந்த அளவிற்குப் பிரம்மாண்டமானவை, கோரமானவை என்பதை விளங்கிக் கொள்ள ஓரே ஒரு குறிப்பு போதும்.

உலக வனவாழ்வு நிதி (World wild life fund –WWF) என்கிற நிறுவனம் நடத்திய ஆய்வு முடிவின்படி 1970லிருந்து 1995 வரை இருபத்தைந்து ஆண்டுகளில் மட்டும் இயற்கை வளம், காடு, மீன் வளம், குடிநீர் ஆதாரம், எரிவாயு ஆகியவற்றின் மூன்றில் ஒரு பகுதியை வரலாற்றிலேயே முன்னர் எப்போதும் இல்லாத மனிதச் செயல்பாடுகளின் விளைவாக உலகம் இழந்துவிட்டது.

இந்த அசுர பயன்பாட்டிற்குப் பின்புலமாக அமைந்தது மேலே சொல்லப்பட்ட மனித வாழ்வு பற்றிய கண்ணோட்டமே. இஸ்லாம் இந்த நெருக்கடிக்கு அற்புதமான, அழகான தீர்வைத் தருகிறது. முதலாவதாக மனிதனுடைய சரியான உண்மையான அந்தஸ்தை அது தெளிவாக எடுத்துரைக்கிறது.

இந்த வானம், பூமி, சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், பேரண்டம் எல்லாமே மனிதனுக்காகவே படைக்கப்பட்டவைதான். என்றாலும் மனிதன் இவற்றுக்கு உரிமையாளன் அல்ல. மாறாக இவற்றை நிர்வகிக்க இறைவனால் நியமிக்கப்பட்ட நிர்வாகி என்று இஸ்லாம் கூறுகிறது.

அதற்கு கலீ஼ஃபா இறைவனின் பிரதிநிதி என்கிற அழகிய சொல்லாடலைக் கையாள்கிறது. இவையெல்லாவற்றையும் பாதுகாத்து, அவற்றை நல்ல முறையில் நிர்வகித்து, அழகிய முறையில் அவற்றிலிருந்து பயன் பெறுவது மட்டுமே மனிதனின் உரிமையாகும்.

அண்ணல் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: "இந்த உலகம் அழகானதாகவும், பசுமையானதாகவும் இருக்கிறது. மகத்துவம் மிக்க இறைவன், உம்மை தனது நிர்வாகியாக ஆக்கி வைத்துள்ளான். நீங்கள் எவ்வாறு செயல்படுகிறீர்கள் என்பதைச் சோதித்துப் பார்ப்பதற்காகவே இந்தப் பொறுப்பைத் தந்துள்ளான்.

இரண்டாவதாக அனைத்து விதமான வீண் விரயத்தையும் இஸ்லாம் தடுக்கிறது.

இன்று சுற்றுச்சூழல் மாசுபடுவதற்கு அடிப்படைக் காரணமாக இருப்பது வரையறையற்ற நுகர்வு மனோபாவமும் வீண் விரயமும்தான்.

அதிகமான பயன்பாட்டை ஊக்குவித்து கழிவுகளையும், கசடுகளையும் உற்பத்தி செய்வது நவீன சிந்தனைகளின் விளைவாகும். அந்தக் கசடுகளே சுற்றுச்சூழல் மாசுபடுத்துவதாக அமைந்து விடுகின்றன.

தேவைக்குப் பதிலாகப் பேராசையை ஊட்டி ஊடக விளம்பரங்கள் மூலம் ஆடம்பரத்தை அத்தியாவசியத் தேவையாக வசியப்படுத்துவது சுதந்திரச் சந்தைப் பொருளாதாரக் கோட்பாட்டின் வழிமுறையாகும்.

Spend only when necessary "தேவையின் போது மட்டுமே செலவிடு" என்பதுதான் முஸ்லிமின் நடைமுறை ஆகும்.

ஒரு முறை நபித்தோழர் சஆத்(ரலி) தொழுகைக்காக முகம், கை, கால்களை அலம்பிக் கொண்டிருந்தார் (ஒழு). அவ்வழியாக வந்த அண்ணலார் சஆதைப் பார்த்து, "என்ன சஆதே! வீண் விரயம் செய்யலாமா?" என்று கேட்டார். "ஒழு" செய்வதற்காகக் கூடுதலாக தண்ணீரைப் பயன்படுத்திக் கொள்வது வீண் விரயமா?" என்று சஆத்(ரலி) கேட்கிறார். நபி(ஸல்) விடையளிக்கிறார்: "ஆமாம், ஓடுகின்ற நதியின் கரையில் அமர்ந்து அதிக நீரைப் பயன்படுத்தி ஒழுச் செய்தாலும் கூட விரயம்தான்"

நீர்ப் பற்றாக்குறை இருந்தாலும் சரி, தாராளமாகக் கிடைத்தாலும் சரி வீண் விரயம் கூடாது. தொழுகை போன்ற புனிதமான வழிபாட்டுக்காக ஒழு செய்யும் போது கூட தேவைக்கு அதிகமாக தண்ணீரைப் பயன்படுத்தக் கூடாது.

தண்ணீர் மட்டுமல்ல மற்றெல்லா இயற்கை வளங்களைப் பயன்படுத்தும் விஷயத்திலும் இந்த வழிமுறை பொருந்தும்.

மூன்றாவதாக, பதில் அளிக்கும் பொறுப்புணர்வை இஸ்லாம் ஏற்படுத்துகிறது.

மறுமை நாளில் நாம் ஒவ்வொரு செயலுக்கும் கணக்குக் காட்ட வேண்டியவர்களாக, பதில் அளிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் என்று இஸ்லாம் தெளிவுபடுத்துகிறது.

இந்தச் சிந்தனையும் நம்பிக்கையுமே நம்மை வீண் விரயத்திலிருந்து தடுக்கக் கூடியதாகும். தண்ணீர் உட்பட எல்லா வளங்களையும் தேவைக்கேற்ப பொறுப்புடன் பயன்படுத்தும் சிந்தனையத் தோற்றுவிப்பதாகும்.

"பிறகு அந்நாளில் இந்த அருட்கொடைகளைப் பற்றி கட்டாயமாக நீங்கள் வினவப்படத்தான் போகின்றீர்கள்"

***(திருக்குர்ஆன் 10:28)***

"பிறகு, எவன் அணுவளவு நன்மை செய்திருந்தானோ அவன் அதனைக் கண்டு கொள்வான். மேலும், எவன் அணுஅளவும் தீமை புரிந்திருந்தானோ அவனும் அதனைக் கண்டு கொள்வான்"

***(திருக்குர்ஆன் 99:78)***

# இணையச் செய்தி (மைக்ரோ ஓவனில் தண்ணீர் சுட வைக்கலாமா?

பல விதமான கதைகள் நமக்கு மெயிலில் வருவதுண்டு. அவற்றில் பெரும்பாலும் உண்மையாக இருப்பதில்லை, வெறும் கட்டுகதைகளே. அது போன்று வந்த இந்த மெயிலைப் பாருங்கள்.

“சில நாட்களுக்கு முன் காப்பி போடுவதற்காக என் மகன் மைக்ரோவேவ் ஓவனில் தண்ணீர் சுட வைத்தான். சுட வைத்த நேரம் முடிந்த பின் அதனை எடுத்த பொழுது நீர் கொதிக்கவில்லையே என அவன் பார்க்கும் பொழுது, அந்த தண்ணீர் அப்படியே எரிமலை போல் பொங்கி அவன் முகத்தில் அடித்தது. அதில் அவனுக்கு பலத்த தீக்காயங்கள் ஏற்பட்டன. நீங்களும் மைக்ரோ ஓவனில் தண்ணீர் கொதிக்க வைக்கும் பொழுது ஜாக்கிரதையாய் இருக்கவும்.”

இது உண்மைச் சம்பவமா? கட்டுக்கதையா? எனத்தெரியவில்லை. ஆனால் இதில் குறிப்பிடப்பட்டிருக்கும் சம்பவம் நடக்கச் சாத்தியக் கூறுகள் இருக்கிறதா? அதைப் பற்றி தெரிந்து கொள்வேம்,

இச்சம்பவம் நடக்க சாத்தியக் கூறுகள் உள்ளது, ஆனால் நடப்பதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவு.

இனி சற்று விபரமாகப் பார்க்கலாம். இது நடக்கக் காரணம் “அதிசூடேற்றம்” (Superheating). அப்படின்னா ஒரு திரவம், அதன் கொதிக்கும் சூட்டை விட அதிகமாகச் சூடாக்கப்படுதல். இப்படி நடக்கும் பொழுது மிக விரைவில் அந்த திரவம் ஆவியாகி விடும். அது திடீரென வெளியேறும் பொழுது அந்த திரவம் வெடிப்பது போலத் தெரிகிறது. ஆனால் இப்படி நடக்க சூழ்நிலைகள் சரியாக அமைய வேண்டும்.

நீரை சுட வைக்கும் பொழுது அதன் மாலிக்யூல்கள் (துடிகள்) உடைந்து ஆவியாக மாறுகிறது. இப்படி ஒரே சமயத்தில் பல மாலிக்யூல்கள் உடைந்தால்தான் ஒரு சிறு குமிழி போல் ஆவி சேருகிறது. இதில் மேலும், மேலும் ஆவி சேர்ந்து பெரிதாகி அது தண்ணீரின் மேல் மட்டத்திற்கு வந்து வெடித்து காற்றில் சேர்கிறது. இதுதான் சாதாரணமாக நீர் கொதிப்பதின் ரகசியம்.

ஆனால் சில சமயங்களில் அந்த முதல் ஆவிக்குமிழிகள் உண்டாகாமல் போவதுண்டு. அந்த சமயங்களில் நீர் கொதிநிலையையும் தாண்டி மேலும் சூடாவதுண்டு. அந்நிலையின் பெயர்தான் “அதிசூடேற்றம்” (Superheating). அப்படி இருக்கும் பொழுது அந்த பாத்திரத்தை ஆட்டினாலோ அல்லது அதில் சர்க்கரை, காப்பித்தூள் என எதையாவது போட்டாலோ அது இந்த ஆவிக் குமிழிகள் உண்டாக ஏதுவாகிறது. இப்படி ஒரேடியாக இக்குமிழிகள் உண்டாகி மேலே வருவதால், அது ஒரு வெடிப்பு போல தோன்றுகிறது. இது மைக்ரோவேவ் ஓவனில் உண்டாக சாத்தியங்கள் அதிகம். ஏனென்றால் இங்கு தண்ணீர் இருக்கும் பாத்திரம் சூடாகாமல் மைக்ரோவேவ் கதிர்கள் நேராக தண்ணீரைச் சூடாக்குவதினால் இது போல ஆகலாம்.

இப்படி ஆக வேண்டும் என்றால், தண்ணீர் கொதிக்க வைக்கப்படும் பாத்திரம் கண்ணாடிப் பாத்திரங்கள் போல் மிக வழவழப்போடு இருக்கவேண்டும். தண்ணீர் சாதாரணமாக கொதிக்க எடுத்துக்கொள்ளும் நேரத்தை விட அதிக நேரம் சுட வைக்கப்பட வேண்டும். பாத்திரத்தில் ஒரு சிறிய கீறல் இருந்தால் கூட இது போல் நடக்காது.

இது போல் நடக்காமலிருக்க “தண்ணீரை கொதிக்க வைக்கும் பொழுது அதற்குண்டான நேரத்தை விட அதிகம் வைக்க வேண்டாம்.”

- மைக்ரோவேவிலேயே ஒரு நிமிடம் விட்டு விட்டு, அதன் பின் எடுங்கள்.

- வெளியே எடுத்த பின் அதில் காப்பி, சர்க்கரை போன்றவற்றை போடும் பொழுது முடிந்த அளவு விலகி நின்று கொள்ளுங்கள்.

- ஒரு மரத்தாலான கலப்பான் (அதாங்க Stirrer) ஒன்றை தண்ணீரில் போட்டு அதன் பின் கொதிக்க வையுங்கள் ●

## – சுவனப் பெண்மணி –

சுவனவாசியான ஒரு பெண்மணியை உமக்கு நான் அறிவித்துத் தரட்டுமா? என இப்னு அப்பாஸ்(ரலி) எம்மிடம் கேட்டார்கள். நான் ஆம் எனக் கூறினேன். அதற்கவர் இக்கருப்பு நிறப் பெண்மணிதான் எனக் கூறினார்கள். இப்பெண்மணி நபி(ஸல்) அவர்களிடம் வந்து எனக்கு வலிப்பு நோய் ஏற்படுகிறது (அதனால்) என்னுடைய ஆடைகள் திறந்து கொள்கின்றன. தாங்கள் அல்லாஹுதஆலாவிடம் எனக்காக துஆச் செய்யுங்கள் எனக் கூறினார். அதற்கு நபி(ஸல்) அவர்கள் “நீ நாடினால் இந்நோயின் மீது பொறுமை செய்வாயாக! உனக்குச் சுவனம் உண்டு (அல்லது) நீ நாடினால் உனக்கு குணமளிக்க நான் அல்லாஹ்விடம் துஆச் செய்கிறேன்.” எனக் கூறினார்கள். அதற்கு அப்பெண்மணி நான் பொறுமை செய்கிறேன் எனக் கூறினார். பின்னர், என் ஆடைகள் திறந்து கொள்கின்றன. அவை திறந்து கொள்ளாமலிருக்க அல்லாஹ்விடம் தாங்கள் துஆச் செய்யுங்கள், எனக் கூறினார். (அதற்காக) அப்பெண்மணிக்கு நபியவர்கள் துஆச் செய்தார்கள்.

***ஆதாரம் : புகாரி, முஸ்லிம்***

***அறிவிப்பாளர் : அதா பின் அபீரபாஹ் (ரஹ்)***

## – செயல்களில் நஷ்டவாளி –

(தும்)செயல்களில் மிகப் பெரும் நஷ்டவாளிகள் யார் என்பதை நான் உங்களுக்கு அறிவிக்கட்டுமா? என்று (நபியே!) நீர் கேட்பீராக. யாருடைய முயற்சி இவ்வுலக வாழ்வில் பயனற்றுப் போயிருக்க தாங்கள் மெய்யாகவே அழகான காரியங்களையே செய்வதாக எண்ணிக் கொண்டிருக்கிறார்களோ அவர்கள்தான். அவர்கள் தங்களுடைய இறைவனின் வசனங்களையும், அவனை (மறுமையில்) சந்திப்போம் என்பதையும் நிராகரிக்கிறார்கள். அவர்களுடைய செயல்கள் யாவும் வீணாகும் மறுமை நாளில் அவர்களுக்காக எந்த மதிப்பையும் நாம் ஏற்படுத்த மாட்டோம்.

***அல்குர்ஆன் : 18:103-105***

அன்றியும், எவர்கள் நிராகரிப்பாளர்களாக இருக்கிறார்களோ, அவர்களுடைய செயல்கள் பாலைவனத்தில் (தோற்றமளிக்கும்) கானல் நீரைப் போலாகும் தாகித்தவன் அதைத் தண்ணீரென்றே எண்ணுகிறான் - (எது வரையெனில்) அதற்கு (அருகில்) அவன் வரும் பொழுது ஒரு பொருளையும் (அங்கே) காணமாட்டானே (அது வரை) ஆனால், அங்கு அவன் அல்லாஹ் (அவனுக்கு விதித்திருக்கும் முடி)வை(யே) காண்கின்றான். (அதன்படி அல்லாஹ்) அவன் கணக்கைத் தீர்க்கிறான் மேலும், அல்லாஹ் கணக்குத் தீர்ப்பதில் துரிதமானவன்.

***அல்குர்ஆன் : 24:39***

# கூகிள் தேடுபொறி (google search engine)

இன்று இணையத்தை பற்றி தெரியாதவர்கள் கூட கூகிளைப்பற்றி தெரிந்து வைத்திருக்கின்றார்கள். கூகிள் தன் சேவைப்பரப்பை காலத்திற்கு காலம் விரிவடைந்துக்கொண்டே வருகின்றது. இப்பொழுது google என்ற சொல் கூட ஒரு வினைச்சொல்லாக அகராதிகளில் புகுந்துவிட்டது. கூகிள் இணைய ரீதியான வாழ்க்கைக்கு மக்களை வழிப்படுத்தி வருகின்றது.

கூகிள் 2006இன் சிறந்த நிறுவனமாக வகைப்படுத்தப்பட்டிருக்கின்றது (இரண்டாம் மூன்றாம் நான்காம் இடங்களில் உள்ளவை முறையே ஆப்பிள் கொம்பியூற்றேர்ஸ், யாகூ, மைக்ரோசாப்ட்). மிக அண்மையில் (டிசம்பர் 2006) கூட NASA நிறுவனத்துடன் கூகிள் தனது சேவைகளை விரிவடையும் முகமாக ஒரு ஒப்பந்தம் ஒன்றை செய்திருக்கின்றது. காலத்திற்கு காலம் தனது சேவைகளில் தேவையற்றவை என கருதப்படுவதை நிறுத்தியும் புதிய சேவைகளை அறிமுகப்படுத்தியும் பயன்படுத்துபவர்களிடையே மிகுந்த செல்வாக்கு செலுத்துகின்ற ஒரு நிறுவனமாக வளர்ந்துள்ளது.

இணையத்தில் ஏதாவது ஒரு விஷயத்தை பற்றி அறிந்து கொள்ளவேண்டுமாயின் எங்களில் அனேகர் உடன் செல்வது கூகிளின் தேடுபொறிக்கே. இத்தேடுபொறி தேடுதல் தவிர அனேக மேலதிக வசதிகளை கொண்டுள்ளது. இவற்றில் சிலவற்றினை கீழே பார்ப்போம்.

நீங்கள் கூகிளை ஒரு பல்வசதி கொண்ட இணையக்கணிப்பானாய் பயன்படுத்த முடியும். உங்கள் சமன்பாட்டை கூகிளின் தேடுபெட்டியினில் உள்ளிட்டுவிட்டு தேடு பொத்தானை அழுத்தினால் அதற்கான விடையை கூகிள் உங்களுக்கு தரும். உதாரணமாக 10+12 என உள்ளிட்டு தேடினால் 22 என விடை வரும். இப்படியான சாதாரண கணக்குகள் மட்டுமன்றி திரிகோண கணிதம் போன்ற கடின கணக்குகளையும் தீர்க்கும்.

கூகிளில் நாங்கள் சமன்பாடுகளை உள்ளிடும் போது கணித விஞ்ஞான மாறிலிகளை பயன்படுத்த முடியும். உதாரணத்திற்கு pi என உள்ளிட்டு தேடினால் 3.14159265 எனவும் speed of light என உள்ளிட்டால் 299792458m/s என விடைகளை தரும்.

கூகிளால் ஒரு அளவீட்டில் இருக்கும் ஒரு பெறுமானத்தை இன்னொரு அளவீட்டுக்கு மாற்ற முடியும். உதாரணமாக 10 feet in meter, 1 cup in teaspoons மற்றும் 100 USD in Saudi Riyals போன்றவற்றை உள்ளிட்டு தேடிப்பாருங்கள்.

கூகிளை ஒரு அகராதியாக பயன்படுத்த முடியும். உதாரணமாக நீங்கள் defenestrate என்ற சொல்லின் அர்த்தத்தினை அறிய வேண்டுமாயின் what is defenestrate என உள்ளிட்டு தேடுங்கள் அவ்வளவுதான்.

ஏதாவது ஒரு சொல்லின் வரைவிலக்கணத்தை அறியவும் நாங்கள் கூகிளை பயன்படுத்த முடியும். உதாரணமாக defenestrate என்ற சொல்லின் வரைவிலக்கணத்தை அறிய define:defenestrate என உள்ளிட்டு தேடுங்கள். peer to peer-இன் வரைவிலக்கணத்தை அறிய வேண்டுமாயின் define: "peer to peer" என உள்ளிட்டு தேடுங்கள் அவ்வளவுதான். உங்களுக்கு இப்போது வரைவிலக்கணம் தெரிந்திருக்கும்.

சில குறிப்பிட்ட விஷயங்களை அறிந்துகொள்ள நாங்கள் கூகிளை பயன்படுத்த முடியும். உதாரணமாக president Germany என உள்ளிட்டு தேடினால் எங்களுக்கு தேவையான பதில் உடனே கிடைத்துவிடும்.

இதைவிட ஐக்கிய அமெரிக்காவில் மட்டும் செல்லுபடியாகும் பல வசதிகள் கூகிளில் உண்டு. தேவையெனில் அவற்றை வேறொரு பதிவில் பார்ப்போம்.

கூகிள் மென்பொருள்கள்

ஒரு கூகிள் மென்பொருளை (Google Toolbar, Google Desktop, Google Earth, Picasa, Google Talk, Google Deskbar போன்றவை) எவ்வாறு வேறு மென்பொருட்களிலிருந்து வேறுபடுத்தி அறிந்து கொள்ளலாம்?

அனேகமாக அது

- ☐ இலவசமாக இருக்கும்
- ☐ தானாகவே தன்னை புதுப்பித்துகொள்ளும்
- ☐ வேகமாக தன்னை புதுப்பித்துகொள்ளும்
- ☐ கணிணியில் நிறுவுவதற்கான மென்பொருள் மிகச்சிறியதாக இருக்கும். (Google Earth தவிர)
- ☐ கூகிள் தேடுபொறியை உங்கள் இணைய உலாவியில் பிரதான பக்கமாக்கவா எனக்கேட்கும்.
- ☐ உதவிப்பக்கம் இருக்காது. உதவி தேவையெனில் குறிப்பிட்ட இணையப்பக்கத்திற்கே செல்லவேண்டும்.
- ☐ உங்கள் கூகிள் பயனாளர் கணக்கை உபயோகித்து உள்நுழைந்து மேலதிக சேவைகளை பெறத் தூண்டும்.
- ☐ அதில் ஒரு தேடுபொறி இருக்கும்.
- ☐ அது குறிப்பிட்ட ஒரு வேலையினை மட்டுமே செய்யும். (Google Desktop தவிர)
- ☐ பயன்படுத்துவதற்கு இலகுவாக இருக்கும்.

**தொகுப்பு : இர்பான்**

# அல்லாஹ்வைக் கொண்டே சத்தியம் செய்யுங்கள்

அல்லாஹ்வைக் கொண்டே தவிர சத்தியம் செய்யாதீர்கள் என நபி(ஸல்) கூறினார்கள்.

***அறிவிப்பவர் : அபூஹுரைரா(ரலி)***

***ஆதாரம் : அபூதாவூத், நஸயீ, இப்னுஹிப்பானீ***

ஒரு யூதப் பெண் நபி(ஸல்) அவர்களிடம் வந்து கஃபாவின் மீது சத்தியமாக'என்றும், அல்லாஹ்வும் நீங்களும் நாடினால்.... என்று உங்களை நோக்கி உங்கள் தோழர்கள் கூறுகிறார்கள். (இதன் மூலம்) நீங்கள் இணை வைக்கிறீர்கள் என்று கூறினார்கள். இதைக் கேட்ட நபி(ஸல்) அவர்கள் கஃபாவின் ரப்பின் மீது சத்தியமாக என்று கூறும்படியும் அல்லாஹ்வும் நாடி, அதன் பின் நீங்களும் நாடினால்..'என்று தம்மை நோக்கி கூறும்படியும் அவர்களுக்கு (ஸஹாபாக்களுக்கு) கட்டளையிட்டார்கள்.

***அறிவிப்பாளர் : குதைலத் பின்த் ஸைஃபீ(ரலி)***

***ஆதாரம் : அஹ்மத் நஸயீ, இப்னுமாஜா***

# DSL - இணைப்பு பெறுவது எப்படி?

- மு.ஃப்தி

**DSL (INTERNET) மற்றும் அதன் பயன்கள்**

துரிதமான இணைய மேய்ச்சல் (Browsing) மற்றும் அதிவேக (Fast Download) பதிவிறக்கத்திற்கு DSL (Digital Subscriber Line) அல்லது Broadband இணைப்பு பயன்படுத்தப்படுகின்றது. இச்சேவை சவூதியில் அதிகப்படியான இடங்களுக்கு கிடைக்கும் வகையில் “சவூதி தொலைபேசி” துறையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனால், இணைய சேவையை கணக்கின்றி, தடங்கலின்றி பயன்படுத்த முடியும். இணைய இணைப்பில் இருக்கும்போதே அதனை துண்டிக்காமல் தொலைபேசியை பயன்படுத்திக் கொள்ளவும் முடியும்.

**உங்களுக்குத் தேவையா-DSL?**

சவூதியில், சராசரியாக ஒரு நாளைக்கு 2 மணிநேரம் டயலப் இணைய சேவையை பயன்படுத்துகின்றவர்கள், DSL-க்கு மாறுவதுதான் சிறந்தது. அதாவது இரண்டு மாதத்திற்கு ஒரு முறை, தொலைபேசி கட்டணத்தில் இணைய இணைப்பிற்காக மட்டும் 300 சவுதி ரியால் செலுத்துகின்றவராக இருப்பீர்களானால், “உங்களுக்குத் தேவை DSL”

**எப்படி பெறுவது?**

சவுதி டெலிகாம் சேவை 907 என்ற எண்ணை அழைத்து அத்தொலைபேசி இணைப்பில் DSL வசதியை பெற முடியுமா? என்பதை உறுதிப் படுத்திக்கொள்ளுங்கள். பயனர்கள், எக்சேஞ்சியிலிருந்து 5 கி.மீட்டர் வட்டத்திற்குள் இருந்தால் மட்டுமே DSL வசதி கிடைக்கும். சவூதி டெலிகாம் தற்போது 128K-யிலிருந்து ஆரம்பித்து 256 K, 512 K, 1MB வேக வசதிகளை வழங்குகிறது.

**தேவையான கருவிகள்**

USB port வசதியுடன் கூடிய கணினி, DSL மோடம், Splitter மற்றும் PPPoE (Point-to Point-Protocol over Ethernet) software இவற்றுடன் DSL வேகம் குறையாமல் இருக்க நேர்த்தியான உள்கட்ட தொலைபேசி இணைப்பு இருக்க வேண்டும். மோசமான தொலைபேசி சேவை கூட DSL வேகத்தை குறைத்துவிடலாம்.

**மோடம் :**

மோடம் வாங்கும்போது சோதித்து பார்த்து வாங்குவது நல்லது. சவூதி தொலைபேசி சேவை நிறுவனத்திலிருந்து உங்கள் வீடு அல்லது அலுவலகத்தின் வாசலில் உள்ள தொலைபேசி இணைப்பு பெட்டி (Junction box) வரை வந்து சோதித்து பார்க்கும் போது, அருகில் இருந்து DSL இணைப்பு இயங்குகின்றதா என்பதை உறுதிப் படுத்திக்கொள்ளுங்கள்.

**எவ்வளவு செலவாகும்?**

சவூதியில் DSL வசதியை அனுபவிக்க கீழ்கண்ட கட்டணங்களை செலுத்த வேண்டும்.

**Tariff**

| Connection | Installation Fee | Monthly | ISP fee |
|---|---|---|---|
| 128 Kbps | 300 SR | 90 SR | Depends on ISP |
| 256 Kbps | | 100 SR | |
| 512 Kbps | | 120 SR | |
| 1 Mbps | | 150 SR | |

DSL சேவையை பயன்படுத்த இந்த வசதியுடன் “இணைய சேவை வழங்கி” எனும் ISP (Internet Service Provider) இணைப்பும் பெற்றிருக்க வேண்டும். இவ்வசதி 64K வேகத்திலிருந்து கிடைக்கின்றது. கீழ்கண்ட இணைய சேவை வழங்கிகளின் தளங்களில் அதன் கட்டணங்களை பார்க்கவும்.

http://www.awalnet.net.sa

http://www.cyberia.net.sa

http://www.sbm.net.sa

http://www.nesma.net.sa

இவை தவிர இன்னும் பல இணைய சேவை வழங்கிகள் இருக்கின்றன. அவற்றின் பட்டியலை www.saudia-online.com/ISP.htm என்ற முகவரியில் பார்க்கலாம்.

இன்றைய நிலவரப்படி சவுதியில் மிகக் குறைவான DSL வேகத்தை அனுபவிக்க, மாதத்திற்கு கீழ்கண்ட செலவு ஆகும்.

சவுதி தொலைபேசி சேவைக்கு 90 ரியால் (128 K Speed)

இணைய சேவை வழங்கிக்கு 69 ரியால்

எனவே,

மொத்தம் : 159 ரியால் (ஒரு மாதத்திற்கு)

மொத்தம் : 318 ரியால் (இரண்டு மாதத்திற்கு)

இக்கட்டணம் DSL சேவைக்கு மட்டும்தான். தொலைபேசி இணைப்பிற்கும் அதனை பயன்படுத்துவதற்கும் தனிக்கட்டணம் எப்பொழுதும்போல் உண்டு.

**குறிப்பு :** ஏப்ரல் 1-ந் தேதி முதல் ஜுன் 30-ந் தேதி (2007) வரையிலான மூன்று மாதத்திற்கு, Installation fee (SR 300) இல்லாமல் DSL இணைப்பு தருவதாக சவூதி தொலைபேசி துறை அறிவிப்பு வெளியிட்டிருக்கின்றது. மேலும் விபரங்களுக்கு அதன் இணையத்தளத்தை (www.stc.com.sa) பார்வையிடவும்.

## பொறுமையின் இலக்கணம்

அனஸ்(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி(ஸல்) அவர்கள், ஓர் அடக்கத் தலத்தின் அருகில் அழுது கொண்டிருந்த ஒரு பெண்ணைக் கடந்து சென்றபொழுது (அவளிடம்) கூறினார்கள்: அல்லாஹ்வைப் பயந்து கொள்., பொறுமையைக் கடைபிடி, -அதற்கு அப்பெண் பதில் கூறினார் : என்னை விட்டும் தூரவிலகிச்செல்லும், எனக்கு ஏற்பட்ட துன்பம் உமக்கு ஏற்படவில்லை, - நபியவர்களை அந்தப் பெண் அறிந்திருக்கவில்லை. பிறகு - இவர்கள்தாம் நபிகளார் என்று அவரிடம் சொல்லப்பட்டது. உடனே அவர் நபியவர்களின் வாசல் தேடி வந்தார். அங்கு காவலாளிகள் யாரையும் அப்பெண் காணவில்லை. அப்பெண் கூறினார்: “உங்களை நான் அறிந்திருக்க வில்லை, -அதற்கு நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: “பொறுமை என்பது துன்பத்தின் தொடக்கத்திலேயே மேற்கொள்வதுதான்”

**ஆதாரம் : புகாரி, முஸ்லிம்**

இமாம் முஸ்லிம்(ரஹ்) அவர்களின் மற்றோர் அறிவிப்பில் உள்ளது: அப்பெண் அழுதுகொண்டிருந்தது அவரது ஆண் குழந்தையின் அடக்கத் தலத்தில்)

## ----- இறை நினைவுகள் -----

- மௌலவி. இப்றாஹிம் மதனி. M.A

இன்ஷா அல்லாஹ் இத்தொடரில் திக்ரின் (இறை நினைவின்) சிறப்புகள் பற்றி தெரிந்து கொள்வோம். இறை நினைவுடன் இருக்கும் போதுதான் அல்லாஹ்வின் அச்சம் அதிகம் ஏற்படும். அல்லாஹ்வின் நினைவிலிருந்து நம்மை தூரமாக்கவே ஷைத்தான் விரும்புகின்றான். இறை நினைவை இழக்கும் போதுதான் அல்லாஹ்வுக்கு நாம் மாறு செய்ய ஆரம்பிக்கின்றோம். அதைத்தான் ஷைத்தானும் விரும்புகின்றான்.அல்லாஹ் திருமறையில் இவ்வாறு கூறுகின்றான்.

***நிச்சயமாக ஷைத்தான் விரும்புவதெல்லாம், மதுபானத்தைக் கொண்டும், சூதாட்டத்தைக் கொண்டும் உங்களிடையே பகைமையையும், வெறுப்பையும் உண்டு பண்ணி அல்லாஹ்வின் நினைவிலிருந்தும், தொழுகையிலிருந்தும் உங்களைத் தடுத்து விடத்தான் எனவே, அவற்றை விட்டும் நீங்கள் விலகிக் கொள்ள மாட்டீர்களா? 5:91***

ஆகவே ஷைத்தானுக்கு மாறு செய்து அல்லாஹ்விற்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டுமானால் இறை நினைவில் நாம் நனைத்திருக்க வேண்டும். இறை நினைவில் இருப்பதெற்கென்று குறிப்பிட்ட நேரம் என்றில்லை. ஓய்வு கிடைக்கும் நேரம், வேலை செய்யும் நேரம் என்று அனைத்து நேரத்திலும் இறை நினைவோடு வாழ வேண்டும். அல்லாஹ் திருமறையில் இவ்வாறு கூறுகின்றான்.

***ஈமான் கொண்டவர்களே! அல்லாஹ்வை அதிகமதிகமான திக்ரைக் கொண்டு திக்ரு (தியானம்) செய்யுங்கள். இன்னும், காலையிலும் மாலையிலும் அவனைத் துதி செய்யுங்கள்.***

***அல்குர்ஆன் : 33:41,42***

ஒரு மனிதர் நபி(ஸல்) அவர்களிடம், இஸ்லாத்தின் சட்டதிட்டங்கள் என்மீது அதிகமாக உள்ளன. ஆகவே நான் உறுதியாகப் பற்றி பிடித்துக் கொள்ளக்கூடிய ஓர் விஷயத்தை எனக்கு அறிவித்துக் கொடுங்கள் என வேண்டினார். அதற்கு நபி(ஸல்) அவர்கள் “உமது நாவு எப்பொழுதும் அல்லாஹ்வின் திக்ரிலேயே நிலைந்திருக்கட்டும்! எனக் கூறினார்கள்.”

***ஆதாரம் : திர்மிதி***

***அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் பின் புஸ்ரு(ரலி)***

ஆகவே இறை நினைவில் அதிகமதிகம் நினைதிதிருப்போமாக! இறை நினைவின் வரிசையில் பாவங்களுக்கு பரிகாரமாகும் இறை நினைவுகளில் சிலதை அடுத்தடுத்த தொடர்களில் தெரிந்து கொள்வோம்.

***இன்ஷாஅல்லாஹ்***

### வாசகர்கள்! – கருத்து!

**அன்பிற்கினிய “சுவனப்பாதை” வாசகர்களே!!!**
**“சுவனப்பாதை” மாதஇதழில் வெளிவரும் கட்டுரைகள், தொடர்கள், செய்திகள் மற்றும் போட்டிகள் குறித்த உங்கள் மேலான கருத்துக்கள், எண்ணங்கள், என எதுவாகினும் எங்களுக்கு எழுத்து மூலம் கீழ்க்கண்ட விலாசத்திற்குத் தெரிவிக்கலாம்.**

**K.L.M. Ibrahim(Madani), Tamil Division,**
**P.O.Box-32628,Jeddah-21438**
**E-mail : suvanam@gmail.com**

---

## சவூதி அரேபியாவில் விசா காலத்திற்கு மேல் தங்கினால் ரூ ஒரு லட்சத்து 20 ஆயிரம் அபராதம்

ஏப்ரல்-3, சவூதி அரேபியாவுக்கு சுற்றுலா விசாவில் செல்பவர்கள், விசா காலாவதி ஆவதற்குள் திரும்பி விட வேண்டும். அப்படி இல்லாமல் விசா காலத்தை விட அதிக காலம் தங்கி இருந்தால் அவர்களுக்கு 6 மாதம் ஜெயில் தண்டனையும் தலா ஒரு லட்சம் ரூபாய் அபராதமும் விதிக்க அந்த நாட்டு அரசு திட்டமிட்டு உள்ளது.

70 லட்சம் வெளிநாட்டு தொழிலாளர்கள்

சவூதி அரேபியாவில் 70 லட்சம் வெளிநாட்டு தொழிலாளர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினர் தங்கி இருக்கிறார்கள். அவர்களில் இந்தியர்கள் அதிக அளவில் உள்ளனர். அவர்களை பார்ப்பதற்கு வரும் உறவினர்கள் மற்றும் ஹஜ் யாத்திரை வரும் யாத்ரீகர்கள் விசாவில் கொடுக்கப்பட்ட கால அவகாசத்துக்குள் அந்த நாட்டில் இருந்து திரும்புவது கிடையாது. அவர்கள் விசா காலத்தை விட அதிக காலம் தங்கி விடுகிறார்கள். இதனால் அந்த நாட்டின் பாதுகாப்பு துறையினருக்கு பல்வேறு விதமான பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

விசா காலத்திற்கு மேல் அதிக காலம் தங்கி இருப்பவர்களை அங்கு இருந்து வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளை அந்த நாட்டு அரசு எடுத்து வருகிறது.

விசா காலத்திற்கு மேல் கூடுதலாக அந்த நாட்டில் தங்கி இருந்தால் அவர்களுக்கு அபராதம் விதிக்கவும், ஜெயில் தண்டனை விதிக்கவும் அந்த நாட்டு பாஸ்போர்ட் இலாகா நடவடிக்கை எடுத்து உள்ளது.

### ஒரு லட்சத்து இருபது ஆயிரம் ரூபாய் அபராதம்

விசா காலத்திற்கு மேல் கூடுதல் காலம் தங்கி இருப்பவர்களுக்கு அபராதமாக தலா ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபாயும், 6 மாதம் ஜெயில் தண்டனையும் விதிக்கப்பட இருக்கிறது. இந்த தண்டனையும் அபராதமும் வெளிநாட்டு பயணிகளுக்கு மட்டும் அல்லாமல், அவர்களுக்கு ஸ்பான்சர் செய்த நிறுவனங்களுக்கும் இந்த தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும்.

விசா காலத்திற்கு மேல் அதிகமாக தங்கி இருப்பவர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதற்காக 2 மாத அவகாசம் அளிக்கப்பட்டு உள்ளது. இன்று (செவ்வாய்க்கிழமை- 3 ஏப்ரல், 2007) முதல் வருகிற ஜுன் 1-ந்தேதிக்கும் அவர்கள் தண்டனை இல்லாமல் வெளியேறலாம். அதற்கு மேல் தங்கி இருந்தால் அவர்கள் அபராதம் மற்றும் தண்டனைக்கு உள்ளாக வேண்டி இருக்கும்.

***நன்றி : தினத்தந்தி***

# அல்லாஹ்வின் அற்புதப் படைப்புகள்- (பாகம் : 6)

# பனிப்பிரதேச பட்டாம்பூச்சிற்கு வெப்பமூட்டும் உடலமைப்பு

**- (ஆங்கில மூலம்: ஹாரூன் யஹ்யா) தமிழில் : அபூ இஸாரா**

உலகில் குளிர்ப்பிரதேசங்களை தங்களது வாழும் இடமாகக் கொண்டிருக்கும் அநேகமான பூச்சியினங்கள் - கடுமையான குளிர்காலம் வரும்பொழுது குளிரின் காரணமாகவோ அல்லது சரியான உணவு இல்லாமலோ இறந்து போகின்றன. ஏனென்றால் பூச்சியினங்கள் கடுங்குளிரை தாங்க முடியாத மென்மையான உடலமைப்பைக் கொண்டவை.

எனினும் பனிப்பிரதேசத்தில் வாழும் ஒருசில பூச்சியினங்கள் மேற்கண்ட விதிக்கு மாற்றமாகத் திகழ்கின்றன. உதாரணத்திற்கு பட்டாம்பூச்சிபோல் தோற்றமளிக்கும் ஒருவகை பூச்சியினம் பார்க்கும்போது மிகவும் மென்மையாகத் தோன்றும் பூச்சியினமாகும், ஆனால் உண்மையில் அவைகள் கடுங்குளிரையும் தாங்கி உயிர்வாழக்கூடிய வலிமை படைத்தவை. எனவேதான் அவைகள் "பனிப்பிரதேச பட்டாம்பூச்சிகள்" என்றழைக்கப்படுகின்றது.

சாதாரண பட்டாம்பூச்சிகளைப் போலவே இவைகளுக்கும் அதன் உடற்பகுதியில் இணைக்கப்பட்ட இரண்டு இறக்கைகள் உண்டு. இந்த பட்டாம்பூச்சிகள் பனிப்பிரதேசத்தில் பறக்க வேண்டுமெனில் இதன் மார்பில் இறக்கைகள் இணைக்கப்பட்டிருக்கும் பகுதியின் வெப்ப நிலை முப்பது டிகிரி சென்டிகிரேடாக இருக்க வேண்டும். ஆனால் அவைகள் உயிர்வாழும் பனிப்பிரதேசத்தின் வெப்ப நிலை சைபர் டிகிரி சென்டிகிரேடு அல்லது அதற்கும் குறைவாகவே இருக்கும். இருப்பினும் இந்தவகை பட்டாம்பூச்சிகள் இத்தனை கடுமையான குளிரில் எப்படி உயிர்வாழ்கின்றன? பறக்காமல் அசைவின்றி இருக்கும்போது, அவைகளை குளிரில் உரைந்து போகவிடாமல் தடுப்பதோடு மட்டுமின்றி, அவைகளை கடுங்குளிரில் எந்தவித பாதிப்புமின்றி பறக்கச் செய்வது எது?



உஷ்ணத்தை உருவாக்கும் பிரத்யேகமான உடலமைப்புடன், கடுங்குளிரிலும் பறந்து செல்லும் விதத்தில் இந்த பனிப்பிரதேச பட்டாம்பூச்சி படைக்கப்பட்டிருப்பதே இதற்கு காரணமாகும். இந்த உஷ்ணத்தை உருவாக்கும் பிரத்யேக அமைப்பு இன்னும் ஏராளமான வசதிகளைக் கொண்டது.

பனிப்பிரதேச பட்டாம்பூச்சிகள் பறப்பதற்கு முன்பு தங்களது முக்கிய தசைகளில் இணைக்கப்பட்டிருக்கும் இறக்கைகளை தொடர்ந்து அசைக்கிறது. இந்த தொடர் அசைவு இதன் மார்புப் பகுதியின் உள் வெப்ப நிலையை அதிகரிக்கச் செய்கிறது. அல்லாஹ் படைத்த இந்த பிரத்யேக அமைப்பு, பனிப்பிரதேச பட்டாம்பூச்சிகளின் உடல் வெப்பநிலையை சைபர் டிகிரி சென்டிகிரேடிலிருந்து முப்பது டிகிரி சென்டிகிரேடுக்கோ அல்லது அதற்கும் மேலாகவோ அதிகரிக்கச் செய்கிறது. இந்த வெப்பநிலை பனிப்பிரதேச பட்டாம்பூச்சிகள் கடுங்குளிரில் உயிர்வாழ போதுமானதாகும். இருப்பினும், பனிப்பிரதேச பட்டாம்பூச்சிகள் பறந்து செல்ல வேண்டுமெனில் தங்களது உடலின் வெப்பநிலையை மாத்திரம் அதிகரித்தல் போதுமானதன்று.

குளிர்பிரசேத்தின் வெப்ப நிலைக்கும், பட்டாம்பூச்சிகளின் உடலில் உள்ள வெப்ப நிலைக்கும் வித்தியாசம் இருப்பதால், பட்டாம்பூச்சிகள் பறக்கும்போது அதன் உடலில் உள்ள வெப்பநிலை குறைய ஆரம்பிக்கும். ஒரு குவளையில் இருக்கும் சூடான தேநீர் சிறிது நேரத்தில் குளிர ஆரம்பிப்பது போல, பட்டாம்பூச்சியின் உடலில் உள்ள வெப்ப நிலையும் குறைய ஆரம்பிக்கும். எனவே பட்டாம்பூச்சி தனது உடலில் உள்ள வெப்ப நிலையை அதிகரிக்கச் செய்வதோடு மட்டுமின்றி, அதே அளவு வெப்பநிலையை தனது உடலில் தக்க வைத்துக் கொள்வதும் அவசியமாகிறது.

குளிர்பிரதேசத்தில் வாழும் பட்டாம்பூச்சிகள் உயிர்வாழவும், பறக்கவும் வேண்டுமெனில் அதன் உடலில் உள்ள வெப்ப நிலையை தக்க வைத்துக் கொள்ளவென இன்னொரு அமைப்பும் தேவைப்படுகிறது. பனிப்பிரதேச பட்டாம்பூச்சியின் இந்தத் தேவையையும் நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் படைப்பாளார்களில் எல்லாம் மிகைத்த படைப்பாளன் அல்லாஹ், அதற்கு இன்னும் ஒரு பிரத்யேக அமைப்பை கொடுத்திருக்கிறான். பனிப்பிரதேச பட்டாம்பூச்சிகளின் உடலமைப்பு - வெப்பம் குறைவதை அடியோடு தடுக்கும் அடர்த்தியான செதில்களை கொண்டுள்ளன. அடர்த்தியான செதில்கள் இல்லாத பனிப்பிரதேச பட்டாம்பூச்சிகள், அடர்த்தியான செதில்களை கொண்டுள்ள பட்டாம்பூச்சிகளைவிட இருமடங்கு விரைவாக குளிரினால் நடுங்க ஆரம்பித்து விடுகின்றன என ஆய்ந்தறிந்த விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

மேற்கூறியவைகள் யாவும் பனிப்பிரதேச பட்டாம்பூச்சிகள் தங்களை குளிரிலிருந்து பாதுகாத்துக்கொள்ள இறைவன் வழங்கிய இயந்திரங்கள். மேற்கூறிய வசதிகள் யாவும் பனிப்பிரதேச பட்டாம்பூச்சிகள் இவ்வுலகில் தோன்றிய நாள் முதலே அவைகளோடு உள்ளவை. இல்லையெனில் கடுங்குளிரினால் இறந்துபோயிருக்கும் இந்த இனம் நாளடைவில் அழிந்தே போயிருக்கும். கடுமையான குளிர்ப்பிரதேசங்களில் வசிக்கும் பனிப்பிரதேச பட்டாம்பூச்சிகள் மற்ற பட்டாம்பூச்சியினங்களை விட சிறப்பியல்களை கொண்டு படைக்கப்பட்டுள்ளது என்றும், அவைகள் கொண்டிருக்கும் சிறப்பியல்புகள் யாவும் எதேச்சையாக கிடைத்தது அல்ல என்பதை விளங்கிக் கொள்வதற்கு பெரிதாக ஒன்றும் சிந்திக்க வேண்டிய அவசியமில்லை.

கடுங்குளிரிலும் உயிர்வாழக் கூடிய சிறப்பியல்புகளை படைப்பாளர்களில் எல்லாம் மேன்மையான படைப்பாளன் வல்ல அல்லாஹ்வே இந்த பனிப்பிரதேச பட்டாம்பூச்சிகளுக்கு வழங்கியிருக்கிறான். அந்த படைப்புகள் அனைத்தையும் அறிந்தவன் வல்ல அல்லாஹ் ஒருவனே. இது பற்றி வல்ல அல்லாஹ் அருள்மறை குர்ஆனில் குறிப்பிடுகிறான்:

**"இன்னும், உணவளிக்க அல்லாஹ் பொறுப்பேற்றுக் கொள்ளாத எந்த உயிரினமும் பூமியில் இல்லை, மேலும் அவை வாழும் (இருக்கும்) இடத்தையும், அவை (மடிந்து) அடங்கும் இடத்தையும் அவன் அறிகிறான். இவையனைத்தும் (லவ்ஹுல் மஹ்பூள் என்னும்) தெளிவான புத்தகத்தில் (பதிவாகி) இருக்கின்றன." (அத்தியாயம் 11 - ஸூரத்துல் ஹூது - வின் 6வது வசனம்).**

# அறிவு மற்றும் பரிசுப் போட்டி- 3:7

## போட்டிக்குரிய கேள்விகள்

1. தற்பொழுது அதிவேகத்தில் செல்லக்கூடிய ரயிலை (மணிக்கு 574.8 கிமீ) அறிமுகப்படுத்தி உலக சாதனை படைத்த நாடு எது?

2. மர்யம்(அலை) அவர்களின் மகன் பெயர் என்ன?

3. இப்றாஹீம்(அலை) அவர்கள் மார்க்கத்தை முன்னிறுத்தி எத்தனை பொய்கள் சொன்னார்கள்?

4. மன்னு-ஸல்வா எனும் உணவு எந்த சமுதாயத்தவருக்கு அனுப்பப்பட்டது?

5. அல்லாஹ்வின் உற்ற நண்பர் இப்ராஹீம்(அலை) உடைய மகன் இஸ்ஹாக்(அலை) உடைய மகன் யஅகூப்(அலை) உடைய மகனானவர்கள் யார்? இவர்களும் ஒரு நபி?

6. உஹது போரின் போது தன்னுடைய முழுச் சொத்துக்களையும் நபி(ஸல்) அவர்களிடம் ஒப்படைத்த நபித்தோழர் யார்?

7. யூதரிடம் இருந்த குடிதண்ணீர் கிணற்றை விலைக்கு வாங்கி மக்களுக்காக அற்பணம் செய்த நபித்தோழர் யார்?

8. (சுவர்க்கத்தில்) கூச்சல் குழப்பமோ, களைப்போ இல்லாத, துளையுள்ள முத்து மாளிகை ஒன்றை இறைவன் யாருக்கு அளிக்க இருப்பது கொண்டு ஜீப்ரில்(அலை) அவர்கள் நற்செய்தி கூறினார்கள்?

9. மனோ இச்சைகளை கொண்டு நரகம் திரையிடப்பட்டுள்ளது, சுவர்க்கம் எதனை கொண்டு திரையிடப்பட்டுள்ளது?

10. மரணித்தரை மூன்று பொருள்கள் பின்தொடரும் அவற்றில் மரணித்தவருடன் இருக்கும் ஒரு பொருள் என்ன?

11. முதன் முதலில் காகிதத்தை பயன்படுத்திய நாடு?

1) சைனா 2) ஜப்பான் 3) துருக்கி 4) இத்தாலி

12. பெரிய வகை சிலந்திப் பூச்சிகள் எத்தனை கண்களைக் கொண்டிருக்கும்?

1) (8) 2) 4 3) 6 4) 10

13. CD - உன்பதன் விரிவாக்கம்?

14. LPG- ன் விரிவாக்கம் என்ன?

15. கீழ் கண்டவற்றில் எது நீளமானது? 1) 1 கிலோ மீட்டர் 2) 1 செண்டி மீட்டர் 3) 1 டெரா மீட்டர் 4) 1 டெகா மீட்டர்

16. ஸ்டீல் என்பது இரும்பு மற்றும் கீழ்கண்ட ஒன்றின் கலவையாகும்.

1) அலுமினியம் 2) நிக்கல் 3) கார்பன் 4) சிலிக்கான்

17. ஜனாஸாத் தொழுகைக்கு குறைந்தது எத்தனை ஸஃப்புகள் இருந்தால் சிறந்தது?

18) அல்லாஹ்வின் படைப்புகள் மீது சத்தியம் செய்வது கூடுமா?

19) Licence - என்பதன் தமிழ் பதம் என்ன?

20) "அல்லாஹும்ம பிஸ்மிக்க அமூது வ அஹ்யா" - என்ற துஆவை எப்போது ஒதவேண்டும்?

## விதிமுறைகள்

1. இப்போட்டியில் கலந்து கொள்ள அனைத்து கேள்விகளுக்கும் விடை தெரிந்திருக்க வேண்டிய அவசியமில்லை.

2. கொடுக்கப்பட்டுள்ள 20 கேள்விகளுக்கு அதிக பட்ச மதிப்பெண்கள் அடிப்படையில் பரிசுக்குரியவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

3. அதிகபட்ச மதிப்பெண்களை ஒன்றுக்கு மேற்பட்டோர் பெற்றிருந்தால் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

4. விடைகளை தனித்தாளில் தெளிவாக கேள்வி எண் மற்றும் அதற்குரிய பதிலை எழுத வேண்டும்.

5. விடைத்தாளை உறையிலிட்டு ஸனாய்யியா இஸ்லாமிய அழைப்பகத்தில்(புதியது) நேரடியாகக் கொடுத்துவிடலாம். தபால் மூலம் அனுப்புவோர்

**K.L.M. Ibrahim(Madani), Tamil Division,**
**P.O.Box-32628,Jeddah-21438**

அல்லது **suvanam@gmail.com** என்கிற முகவரிக்கு **பிரதி** மாதம் **29**-அல்லது **30**ஆம் தேதிக்குள் கிடைக்குமாறு அனுப்பவேண்டும்.

6. நீங்கள் அனுப்பும் உறையில் உங்கள் பெயர் மற்றும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி எண்ணை மறவாமல் குறிப்பிடவும்.

7. பரிசு பெற்றவர்கள் விபரம் மற்றும் விடைகள் ஒரு மாதம் விட்டு அடுத்த மாத இதழில் வெளிவரும்.

8. ஆசிரியர் முடிவே இறுதியானது.

## அறிவுப் போட்டி – 3: 5 க்கான விடைகள்

1. மூன்று
2. வியாழன்
3. பத்ருபோர்
4. செல்வம் பெற்றிருந்து அதிகமாக தர்மம் செய்பவர்
5. கூடாது.
6. மூன்று
7. 100
8. இந்தியா
9. அபூபக்ர்(ரலி)
10. ஒரு நாள் மட்டும்
11. அணிவதற்கு மாற்றமானது.
12. அல்லாஹும் மஃபிர்லி அப்வாப ரஹ்மதிக்க
13. முழுமையான இறைநம்பிக்கையாளன் அல்லன்
14. அனுமதிக்கப்படவில்லை
15. அல் பாத்திஹா
16. கையைக் கொண்டு மூடிக்கொள்ள வேண்டும்
17. பித்அத்
18. இலங்கை
19. இரண்டு
20. ஹம்ஸா(ரலி)

**அறிவுப் போட்டி – 3:5 க்கான பரிசு பெறுபவர் : T.N.T. ரம்ஸீன்**

பரிசு பெற்றவர் ***மௌலவி. இப்ராஹீம் மதனி*** அவர்களைத் தொடர்பு கொண்டு பரிசை பெற்றுக்கொள்ளவும் – (050 6625229)